

# GSP+ திட்டமும் இலங்கையின் மனித மற்றும் தொழிலாளர் உரிமைகளும்

2019 ஆவணி

DEMOCRACY REPORTING INTERNATIONAL



# பொதுவான முன்னுரிமைப்படுத்தல் திட்டம் (ஜி.எஸ்.பி.)

ஜி.எஸ்.பி என்பது அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நோர்வே போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தங்கள் பொருட்களை குறைந்த கட்டணம் அல்லது தீர்வையற்ற முறையில் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும் ஒரு வர்த்தக ஏற்பாடாகும். 1970 இலிருந்து இலங்கை ஜி.எஸ்.பி.திட்டம் மூலம் நன்மையடைந்து வருகின்றது. இந்தத் திட்டமானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வறுமையைக் குறைக்கவும் ஆட்சி மற்றும் நிலையான அபிவிருத்தி செயற்திட்டத்தை வளர்ச்சியடையச் செய்யவும் உதவும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் வழங்கப்படுகின்றது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் திட்டம் என்றால் என்ன?

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி திட்டத்தின் கீழ், ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் மற்றும் அனைத்தும் ஆனால் ஆயுதங்கள் (EBA) நடத்துதல் எனும் விசேட ஊக்குவிப்பு ஏற்பாடுகளை 2005 இல் அறிமுகப்படுத்தியது. அனைத்தும் ஆனால் ஆயுதங்கள் (EBA) நடத்துதலின் கீழ் 49 நாடுகள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள்[1] தவிர்ந்த அனைத்து பொருட்களையும் இலவசமாக அணுகக் கூடிய தீர்வையற்ற கோட்டாக்களைப் பெறுகின்றன. ஜி.எஸ்.பி பிளஸ், ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2005 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் உள்ள

பொருட்களை, ஜி.எஸ்.பி பிளஸ் பயனாளி நாடுகளினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்ய முடியும். இது பயனாளி நாடுகளினால் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்களிக்கிறது. தற்சமயம் ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தின் கீழ் இலங்கை, ஆர்மேனியா, பொலிவியா, கேப் வெர்டே, கிர்கிஸ்தான், மொங்கோலியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 8 நாடுகள்[2] தகுதி பெற்றுள்ளன.

## ஜி.எஸ்.பி பிளஸ் திட்டத்தின் கீழ் தகுதி பெறத் தேவையான தகைமைகள்

நாடுகள் GSP+ இனைப் பெற்றுக் கொள்வதற்கு, பிரவேசிப்பதற்குத் தேவையான நிபந்தனைகளை எட்டுவதனை அந்த நாடுகள் வெளிப்படுத்த வேண்டும்:[1]

- உலக வங்கியால் ”உயர் நடுத்தர வருமானத்திற்கு” கீழே வருமான நிலை இருப்பதாக வகைப்படுத்தப்பட வேண்டும்
- ஐரோப்பிய சந்தைக்கு முன்னுரிமை அணுகலை வழங்கும் வேறொரு ஏற்பாட்டிலிருந்து (ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை போன்றவை) நன்மையடையக் கூடாதுஸ்ரீ
- மனித உரிமைகள், தொழிலாளர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பான 27 சமவாயங்களில் கைச்சாத்திடவும், இந்த சமவாயங்களை செயல்படுத்துவதை கண்காணிக்கும் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைக்கவும் வேண்டும்

## ஜி.எஸ்.பி பிளஸ் திட்டத்திற்கு விண்ணப்பித்தல்

ஆர்வமும் தகுதியும் உள்ள நாடுகள் ஜி.எஸ்.பி. பிளஸ் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கப்பட்டவுடன் சுமார் 10 மாத கால மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

ஐரோப்பிய ஆணைக்குழு விண்ணப்பத்தை பரிசீலிக்கவும் தேவையான தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் வழங்குவது தொடர்பில் முன்மொழியவும் 6 மாதங்கள் தேவைப்படும்.

அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் கவுன்சில் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் என்பன ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட திட்டத்தை பரிசீலிக்கவும் தீர்மானம் ஒன்றிற்கு வரவும் 2 மாதங்கள் தேவைப்படும்.



## கண்காணித்தல்

27 சமவாயங்களில் இலகுவில் கைச்சாத்திட்டால் மாத்திரம் போதுமானதல்ல. பயனாளி நாடுகள் இந்த சமவாயங்களை செயற்படுத்துவதுடன் இணைந்து செல்லவும் வேண்டும். இந்த 27 சமவாயங்களும் பயனாளி நாடுகளால் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. கண்காணிப்பு செயன்முறையானது, தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல், கலந்துரையாடலும் நேரடி விஜயங்களும், சிவில் சமூக குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் வேறு சிலர் உள்ளடங்களாக சம்பந்தப்பட்ட பல்வேறு பங்குதாரர்களை உள்ளடக்கியதாகும். விண்ணப்பதாரிக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வழங்கப்பட்டவுடன் ஐரோப்பிய ஒன்றியமானது 27 சமவாயங்கள் தொடர்பாக பயனாளி நாடுகளின் இணக்கப்பாடு மற்றும் முன்னேற்றம் குறித்து இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அறிக்கை ஒன்றை வெளியிடும்.

## ஜி.எஸ்.பி. பிளஸ் மற்றும் இலங்கை

இலங்கை 2005 முதல் ஜி.எஸ்.பி. பிளஸ் பயனாளியாக இருந்து வருகிறது. எனினும் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் நன்மையை 2009 ஆம் ஆண்டு தற்காலிகமாக இடைநிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்தது. இதற்குக் காரணம், சிறுவர் உரிமைகள் சமவாயம், சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை மற்றும் துன்புறுத்தலுக்கு எதிரான சமவாயம் ஆகிய மூன்று சமவாயங்களுடன் இலங்கை உடன்பட்டுச் செல்லாமையினாலாகும்.

மே 2017 இல் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் மீள வழங்கப்பட்ட போதிலும் தற்சமயம் இலங்கையில் மரண தண்டனையை மீள அறிமுகப்படுத்துவது பற்றிய கதையாடல்கள் ஆரம்பித்துள்ளதன் காரணமாக, இந் நிலைமைகளில் கீழ் இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இழக்கக் கூடும் என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

# இலங்கையின் பொருளாதாரத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் இன் தாக்கங்கள்

இந்த திட்டத்தின் கீழ் இலங்கையினால் 6000 உற்பத்திகளை ஐரோப்பிய சந்தைக்கு தீர்வையின்றி ஏற்றுமதி செய்ய முடியும். இது இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக, மீள வழங்கப்பட்ட மே 2017 வரை இலங்கை 150-250 பில்லியன் ரூபா வருமான இழப்பைச் சந்திக்க வேண்டியேற்பட்டது. இதற்கு மேலதிகமாக, இலங்கை 55 பில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 9.625 ட்ரில்லியன் ) பெறுமதியான வெளிநாட்டுக் கடன் பொறியில் சிக்க வேண்டியேற்பட்டது. இதனை வேறு வகையில் சொல்வதானால் ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் வெளிநாட்டு கடன் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய கடன்தொகை ரூபா 437,500 ஆகும். 2019 பெப்ரவரி 4 வரை பாரிய கடன் வழங்குனர்களில் சீனா (14%), ஆசிய அபிவிருத்தி வங்கி (14%), ஜப்பான் (12%), உலக வங்கி (11%) ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

மே 2017 முதல் ஜி.எஸ்.பி பிளஸ் மீண்டும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதி 24 மாதங்களில் 11% இனால் அதிகரித்தது. . ஆடை உற்பத்திகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 60% ஆக இருந்தாலும், பாரம்பரியமற்ற ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது இது 8% மட்டுமே அதிகரித்துள்ளது.

அதிகரித்துவரும் மாதாந்த வெளிநாட்டுக் கடன் தவணைகளை மீளச் செலுத்துவதற்காக, அந்நியச் செலாவணிகளை அதிகரிக்க வேண்டிய சிக்கலான நிலைக்கு இலங்கை முகங்கொடுத்துள்ளது. தற்போது வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்காக மேலும் கடன்களை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை அதிகரிப்பதன் காரணமாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைவதுடன், உணவு, பெற்றோலியம் மற்றும் மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களின் விலையையும் அதிகரிக்கச் செய்துள்ளது.



# ஜி.எஸ்.பி பிளஸ் திட்டத்தின் கீழ் தகுதிபெறுவதற்கு பயனாளி நாடுகள் சம்மதம் தெரிவிக்க வேண்டிய சர்வதேச சமவாயங்களின் பட்டியல்

முக்கிய மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள் ஐ.நா ; ஐ.எல்.ஓ சமவாயங்கள்

1. இனப் படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டிப்பதற்கான சமவாயம் (1948)
2. அனைத்து வகையான இன பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயம்
3. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (1966)
4. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (1966)
5. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான மாநாடு (1979)
6. சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம் (1984)
7. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் (1989)
8. கட்டாய வேலை தொடர்பான சமவாயம், இல. 29 (1930)
9. சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமையைப் பாதுகாத்தல் தொடர்பான சமவாயம், எண் 87 (1948)
10. ஒழுங்கமைப்பதற்கான உரிமைகள் மற்றும் கூட்டாக பேரம் பேசுவதற்கான சமவாயம், இல 98 (1949)

11. சம மதிப்புடைய வேலைக்கு ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் தொடர்பான சமவாயம் இல 100 (1951)

12. பலவந்தமான வேலையை ஒழிப்பது தொடர்பான சமவாயம் இல 105 (1957)

13. தொழில் மற்றும் வேலைவாய்ப்பை மதிப்பதில் பாகுபாடு தொடர்பான சமவாயம், இல 111 (1958)

14. வேலைவாய்ப்புக்கான குறைந்தபட்ச வயது தொடர்பான சமவாயம் இல 138 (1973)

15. குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கை மற்றும் தடைவிதித்தல் தொடர்பான சமவாயம் இல 182 (1999)

## சுற்றுச்சூழல் மற்றும் ஆளுகை விதிகள் தொடர்பான சமவாயங்கள்

16. அருகிவரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சமவாயம் (1973)

17. ஓசோன் படலத்தை பாதிக்கும் பதார்த்தங்கள் தொடர்பான மொன்ட்ரியல் சமவாயம் (1987)

18. அபாயகரமான கழிவுகளின் எல்லைப்புற நகர்வுகளை கட்டுப்படுத்தல் மற்றும் அவற்றை அகற்றுதல் தொடர்பான பாஸல் சமவாயம் (1989)

19. உயிரியல் பல்வகைமை தொடர்பான சமவாயம் (1992)

20 காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு சமவாயம் (1992)

21. உயிர் பாதுகாப்பு குறித்த கார்டேஜீனா சமவாயம் ( 2000)

22. தொடர்ச்சியான ஓர்கானிக் மாசுபடுத்தல் தொடர்பான ஸடோக்ஹோம் சமவாயம் (2001)

23. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு கியோட்டோ சமவாயம் (1998)

24. போதை மருந்துகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் தனிச் சமவாயம் (1961)

25. சைக்கோட்ரோபிக் பொருட்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம் (1971)

26. சட்டவிரோத போதை மருந்து கடத்தலுக்கு எதிரான மற்றும் சைக்கோட்ரோபிக் பொருட்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம் (1988)

27. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் (2004)

## எட்டு ஐ.எல்.ஓ (சர்வதேச தொழிலாளர் அமைப்பு) தொழிலாளர் சமவாயங்களின் சுருக்கமான கண்ணோட்டம்

சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் ஐ.எல்.ஓ.வின் அங்கத்தவர்களால் (அரசாங்கங்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர்கள்) வரையப்பட்ட சட்டக் கருவிகளாகும். அவை அடிப்படை விதிகளையும் தொழில் உரிமைகளையும் அமைக்கின்றன. அவை சமவாயங்களாக இருக்கலாம் (அல்லது நெறிமுறைகள்), அவை உறுப்பு நாடுகளால் அங்கீகரிக்கப்படக்கூடிய சர்வதேச ஒப்பந்தங்களை சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்துகின்றன, அல்லது கட்டுப்படுத்தாத வழிகாட்டுதல்களாக செயல்படும் பரிந்துரைகளாக அமைகின்றன.

பல சந்தர்ப்பங்களில், ஒரு சமவாயம் நாடுகளை அங்கீகரிப்பதன் மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய அடிப்படைக் கொள்கைகளை வகுக்கிறது, அதே சமயம் தொடர்புடைய பரிந்துரை எவ்வாறு சமவாயத்தைப் பயன்படுத்துகிறது என்பதற்கான விரிவான வழிகாட்டுதல்களை வழங்குகிறது. சில நேரங்களில் பரிந்துரைகள் தனித்திருக்கலாம், அதாவது எந்தவொரு சமவாயத்துடனும் இணைக்கப்படாதிருக்கலாம்.

## பலவந்தமான வேலை தொடர்பான சமவாயம், இல. 29 (1930)

இந்தச் சமவாயம் அனைத்து வகையான வடிவங்களிலும் பலவந்த அல்லது கட்டாய உழைப்பைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கான உறுப்பு நாடுகளின் கடப்பாட்டை முன்வைக்கிறது. தானாக முன்வந்து வழங்காத, எந்தவொரு நபரிடமிருந்தும் தண்டனையாக பெறப்பட்ட எந்தவொரு வேலை அல்லது சேவையும் பலவந்த அல்லது கட்டாய உழைப்பு என இந்தச் சமவாயத்தில் வரையறுக்கப்படுகிறது. 18-45 வயதிற்குட்பட்ட நபர்கள் மட்டுமே பலவந்த அல்லது கட்டாய உழைப்பு வகைப்படுத்தலின் கீழ் குறிக்கப்படலாம் என்று இந்தச் சமவாயம் குறிப்பிடுகிறது

மேலும் குறித்த நபர் மருத்துவ சான்றிதழ் ரீதியாக பணிக்கு தகுதியானவராக இருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இதில் விதிவிலக்குக்குரியவர்கள்.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 05 ஏப்ரல் 1950 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



## பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

இலங்கையின் 1978 அரசியலமைப்பு, 2015 ஆம் ஆண்டு வரையான திருத்தங்களுடன்

தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள்

கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் ஒழுங்குபடுத்தல்) - சட்டம் (1954 இன் இல 19)

தொழிற்சாலைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் (2002 இன் இல 19)

வேலையாட்கள் விடுமுறை சட்டம் (1959 இன் இல 6)

## சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம் மற்றும் ஒழுங்கமைப்பதற்கான உரிமையைப் பாதுகாத்தல் தொடர்பான சமவாயம், எண் 87 (1948)

இந்தச் சமவாயம், முன் அங்கீகாரமின்றி தங்களுக்கு விருப்பமான நிறுவனங்களில் சேர தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர்கள் இருவரின் உரிமைகள், விதிகள் மற்றும் யாப்புகளை உருவாக்குவதற்கான அமைப்புகளின் உரிமைகள், அதிகாரிகளுக்கு வாக்களித்தல் மற்றும் அரச அதிகாரிகளின் குறுக்கீடு இல்லாமல் நிர்வாக செயல்பாடுகளை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 15 செப்டம்பர் 1995 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

இலங்கையின் 1978 அரசியலமைப்பு, 2015 ஆம் ஆண்டு வரையான திருத்தங்களுடன்

தொழிற்சங்க கட்டளைச் சட்டம், 1935

தொழிற்துறை முரண்பாடுகள் சட்டம், 1950 மற்றும் அதன் திருத்தங்கள்

தொழிற்துறை முரண்பாடுகள் (விசாரணைகள் மற்றும் செயல்முறைகளை தீர்மானித்தல்) (விசேட பிரிவுகள்) சட்டம் (சட்ட இல 2003 இன் 13)

மத்தியஸ்தம் சட்டம் (1995 இன் இல 11)

வேலையாட்களின் சபைச் சட்டம், 1979 (1979 இன் இல 32) மற்றும் அதன் திருத்தங்கள்

தொழிற்சங்கங்கள் கட்டளை (1935 இன் இல 14) மற்றும் அதன் திருத்தங்கள்

தொழிற்சங்கங்கள் ஒழுங்குபடுத்தல், 1935.

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் (தோட்டங்களுக்குள் நுழைதல்) சட்டம் (1970 இன் இல 25)

## ஒழுங்கமைப்பதற்கான உரிமைகள் மற்றும் கூட்டாக பேரம் பேசுவதற்கான சமவாயம், இல 98 (1949)

இந்தச் சமவாயம் தொழில் வழங்குனர்களின் எந்தவித தலையீடுமின்றி சுயாதீனமாக ஒழுங்கமைப்பதற்கான தொழிற்சங்க உறுப்பினர்களின் உரிமைகளை உறுதி செய்கிறது. வேலையாட்கள் தொழிற்சங்கத்தில் இணைதலுக்கு எதிரான பாகுபாடுகளிலிருந்தும் குறிப்பாக தொழிற்சங்கத்தில் இணைய தொழில் வழங்குனர்கள் நிபந்தனைகளை விதித்தல், பணிநீக்குதல் அல்லது ஏதேனும் தொழிற்சங்கத்தில் இணைவது பற்றி அல்லது தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் பற்றி தப்பபிப்பிராயம் கொள்தலிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது. ”நிதி அல்லது வேறு ஏதேனும் வழிகளில்” தொழிற்சங்கங்களில் வேலை வழங்குனர்கள் ஆதிக்கம் செலுத்துவதை இது தடுக்கிறது.

கூட்டாக பேரம் பேசுவதைப் பொறுத்தவரை, கூட்டாக பேரம் பேசுவதன் மூலம் வேலைவாய்ப்பு விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஒழுங்குபடுத்த தொழிலாளர் அமைப்புகள் மற்றும் தொழில் வழங்குனர் குழுக்களிடையே தன்னார்வ பேச்சுவார்த்தைக்கு இயந்திரங்களின் முழு வளர்ச்சி மற்றும் பயன்பாட்டை சட்டம் ஊக்குவிக்க வேண்டும் என்பதை சமவாயம் வேண்டுகிறது.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 13 டிசம்பர் 1972 உல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

இலங்கை ஜனநாயக குடியரசின் 1978 அரசியலமைப்பு, 2000 ஆம் ஆண்டு வரையான திருத்தங்களுடன்

தொழிற்சங்க கட்டளைச் சட்டம், 1935

தொழிற்துறை முரண்பாடுகள் சட்டம், 1950 மற்றும் அதன் திருத்தங்கள்

## சம மதிப்புடைய வேலைக்கு ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் தொடர்பான சம-வாயம் இல 100 (1951)

இந்தச் சமவாயம் அங்கத்துவ நாடுகள் சம மதிப்புடைய வேலைக்கு ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்குவதை உறுதிப்படுத்த கோருகிறது. இது ஊதியத்தின் அளவை பால்நிலை அடிப்படையில் பாகுபாடின்றி நிர்ணயிப்பதை குறிக்கிறது.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 1 ஏப்ரல் 1993 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

ஊதிய சபைகள் கட்டளை 1941

கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் ஒழுங்குபடுத்தல்) - சட்டம் (1954 இன் இல 19)

வேலையாட்களுக்கான தேசிய குறைந்தபட்ச ஊதிய சட்டம் 2016

## கட்டாய வேலையை இல்லாதொழிக்கும் சமவாயம் , இல 105 (1957)

அங்கத்துவ நாடுகள், அரசியல் வற்புறுத்தல், கல்வி அல்லது நிறுவப்பட்ட ஒழுங்கை எதிர்க்கும் அரசியல் கருத்துக்கள் அல்லது கருத்துக்களை கொண்டிருத்தல் அல்லது வெளிப்படுத்துவதற்கான தண்டனையாக எந்தவொரு கட்டாய உழைப்பையும் பயன்படுத்தக் கூடாது என்றும் பொருளாதார வளர்ச்சியின் நோக்கங்களுக்காக, தொழிலாளர் ஒழுக்கத்தின் வழிமுறையாக, வேலைநிறுத்தங்களில் பங்கேற்பதற்கான தண்டனையாகவும், இன, சமூக, தேசிய அல்லது மத பாகுபாட்டின் வழிமுறையாகவும் உழைப்பைத் திரட்டுவதற்கும் பயன்படுத்தக் கூடாது என இந்த மாநாடு கூறுகிறது.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 07 ஜனவரி 2003 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

இலங்கையின் 1978 அரசியலமைப்பு, 2015 ஆம் ஆண்டு வரையான திருத்தங்களுடன்

தண்டனைக்கோவை, 1885 மற்றும் அதன் அடிமைத்துவத்தை ஒழித்தல் கட்டளைகள் திருத்தங்கள் (1844 இன் இல 20)

இலங்கையின் தேசிய குடிபெயர்தல் கொள்கை

## தொழில் மற்றும் வேலைவாய்ப்பை மதிப்பதில் பாகு-பாடு தொடர்பான சமவாயம், இல 111 (1958)

இனம் அல்லது நிறம், பாலினம், மதம், அரசியல் அபிப்பிராயம், வேலைவாய்ப்பில் தேசிய அல்லது சமூக தோற்றம் மற்றும் சம வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களை ரத்துச் செய்தல் உள்ளிட்ட எந்தவொரு அடிப்படையிலும் அனைத்து பாகுபாடுகளையும் விலக்கையும் தடைசெய்யும் சட்டத்தை நிறைவேற்ற உறுப்பு நாடுகளை இந்த மாநாடு கோருகிறது.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 27 நவம்பர் 1998 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



## பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

அரசியலமைப்பின் (1978) உறுப்புரைகள் 12, 12(2)

மகப்பேறு நன்மைகள் கட்டளைகள், 1939

கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் ஒழுங்குபடுத்தல்) - சட்டம் (1954 இன் இல 19)

பொது நிர்வாக சுற்றுநிருபம் 1988 இன் இல 3

சமூக பாதுகாப்பு சபை சட்டம் 1996

தேசிய சுகாதார கொள்கை 1996

தண்டனைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் 1995

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வேலைவாய்ப்பு சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்

மகளிர் சாசனம் (1993)

## வேலைவாய்ப்புக்கான குறைந்தபட்ச வயது தொடர்பான சமவாயம், இல 138 (1973)

சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதை இல்லாதொழிப்பதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தேசியக் கொள்கையைத் தொடரவும், இள வயதினரின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு ஏற்ற அளவிற்கு வேலைவாய்ப்பு பெற அல்லது வேலையில் இணைவதற்கான குறைந்தபட்ச வயதை உயர்த்துமாறு உறுப்பு நாடுகளை வலியுறுத்துவதை இந்த சமவாயம் நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் கட்டாய பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யும் குறைந்தபட்ச வயதை விட குறைவாக இருக்கக்கூடாது என்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 15 வயதுக்கு குறையாது என்றும் இந்த சமவாயம் குறிப்பிடுகிறது.

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 11 பெப்ரவரி 2000 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிரயோகிக்கப்படக் கூடிய உள்நாட்டு சட்டங்கள்

பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வேலைவாய்ப்பு சட்டம் (1956 ஆம் ஆண்டின் 47 வது இல)

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டின் 45 ஆவது இல)

ஊழியர் சேமலாப நிதி சட்டம் (1958 ஆம் ஆண்டின் 15 ஆவது இல)

தொழிற்சங்க கட்டளைச் சட்டம், 1935

சம்பள சபை கட்டளை சட்டம் (1941 இன் 27 ஆம் இல)

கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் ஒழுங்குபடுத்தல்) - சட்டம் (1954 இன் இல 19)

# குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கை மற்றும் தடைவிதித்தல் தொடர்பான சமவாயம், இல 182 (1999)

இந்தச் சமவாயம் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை சிறுவர்களாக வரையறுக்கிறது. அத்துடன் அங்கத்துவ நாடுகள் குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களை அகற்றுவதற்கும் தடைவிதிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறுகிறது.

இந்தச் சமவாயம் பின்வருவனவற்றை குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களாக குறிக்கிறது.

- குழந்தைகளின் விற்பனை மற்றும் கடத்தல், கடன் அடிமைத்தனம் மற்றும் பலவந்த அல்லது கட்டாய உழைப்பு போன்ற அடிமைத்தனத்திற்கு ஒத்த அனைத்து வகையான அடிமைத்தனம் அல்லது நடைமுறைகள், ஆயுத மோதலில் பயன்படுத்த குழந்தைகளை பலவந்தமாக அல்லது கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்வது
- சிறுவர்களை விபசாரத்துக்கு பயன்படுத்தல், ஆபாசம் அல்லது ஆபாச நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்தல்
- சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு சிறுவர்களைப் பயன்படுத்துதல், குறிப்பாக தொடர்புடைய சர்வதேச ஒப்பந்தங்களில் வரையறுக்கப்பட்டுள்ளபடி போதை மருந்து உற்பத்தி மற்றும் கடத்தல்
- அதன் இயல்பு அல்லது அது மேற்கொள்ளப்படும் சூழ்நிலைகளால், சிறுவர்களின் உடல்நலம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் வேலை

இந்த ஐ.எல்.ஓ. சமவாயம் இலங்கையினால் 1 மார்ச் 2001 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



## தொடர்புடைய உள்நாட்டு சட்டங்கள்

- பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் வேலைவாய்ப்பு சட்டம் 1956
- கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியம் ஒழுங்குபடுத்தல்) - சட்டம் (1954 இன் இல 19)
- அபாயகரமான தொழில் விதிமுறைகள் 2010

# REFERENCES


1 https://www.un.org/ldcportal/new-european-union-report-on-the-effects-of-its-trade-schemes-on-promoting-development/

2 http://trade.ec.europa.eu/doclib/docs/2019/may/tradoc_157889.pdf

3 http://www.dailynews.lk/2018/08/20/business/160103/sl-suffers-rs-150-250-bn-loss-due-gsp-withdrawal

4 Sri Lanka's debt-ridden independence, www.ft.lk/dinesh-weerakkody/Sri-Lanka-s-debt--ridden-independence/5-672066

5 http://www.ft.lk/opinion/GSP-Plus-impact/14-661186

6 ibid



இந்த பதிப்பு ஜேர்மனி Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) அலுவலகத்தின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பதிப்பில் உள்ள உள்ளடக்கங்கள் யாவும் Democracy Reporting Internationalஇன் ஏகவுரிமை கொண்டதாகும். இவ் உள்ளடக்கங்கள் ஜேர்மனி Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) அலுவலகத்தின் எண்ணங்களை பிரதிபலிப்பதாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

**Photo credits: Valerii Iavtushenko / Shutterstock.com / maatram.org**

DEMOCRACY
REPORTING
INTERNATIONAL

## பற்றி

Democracy Reporting International (DRI) என்பது பக்கச் சார்பற்ற, சுயாதீனமான, இலாப நோக்கத்திற்கு அற்ற ஜெர்மனியின், பெர்லினில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். பிரஜைகளின் அரசியல் பங்குபற்றல், அரச அங்கங்களின் பொறுப்புடைமை, மற்றும் விசேடமாக ஜனநாயக நிலைமாற்றத்தை எதிர்கொண்டிருக்கும் நாடுகளில் ஜனநாயக நிறுவனங்களின் அபிவிருத்தி என்பவற்றை முன்னிறுத்தி DRI செயற்படுகின்றது. GSP+ தொடர்பில் கவனம் செலுத்தும் வெகுசில சர்வதேச செயற்பாட்டளர்களில் ஒன்றாக DRI உள்ளது. குறிப்பாக, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக திருத்தத்திற்கு ஆதரவளிப்பதற்கு அதன் நிபந்தனைகளைப் பயன்படுத்துகின்றது. GSP+ திட்ட ஊக்குவிப்பின் ஊடாக பரந்தளவு பங்குதாரர் பங்குபற்றலை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் ஜனநாயக ஒருங்கிணைப்பினையும், முழுமையான சர்வதேச அனுபவத்தை மற்றும் இந்த திருத்த செயற்பாடு குறித்து அறிவிப்பதற்கும் என இரண்டிற்கும் இந்த செயற்றிட்டம் இலக்கு வைத்துள்ளது.


Democracy Reporting International gGmbH

Prinzessinnenstraße 30
10969 Berlin, Germany.
T / +49 30 27 87 73 00
F / +49 30 27 87 73 00-10
info@democracy-reporting.org

Democracy Reporting International

83A New Parliament Road, Pelawatte
Battaraulla, Sri Lanka.
T/ +94 112 787 662
srilanka@democracy-reporting.org
www.democracy-reporting.org